மழைநீர் சேமிப்போம்""                                              பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 29.07.2024

**<u>நகர்மன்ற சாதாரண கூட்டம் ( மேஜை பொருள் )</u>**

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சோபகிருது வருடம், ஆடித்திங்கள் மாதம் 13-ம் நாள்29.07.2024-ம் தேதி திங்கள் கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சாதாரண கூட்டம் நடைபெறும். அதில் மேஜை பொருள் சேர்கப்பட்டுள்ளது. அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

**<u>பொருள் 01:</u>-**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண். 5-ல் உள்ள கோபால் சுவாமி எதிர்புறம் உள்ள செங்கோல் தெருவில் வீரப்பஅய்யனார் கோவில் சாலையில் சிறுபாலம் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளது. இந்த சிறுபாலத்திற்கும் செங்கோல் தெருவிலிருந்து வருகின்ற வடிகால் மூடப்படாத நிலையில் இருப்பதால் பொதுமக்கள் சென்று வர முடியாத சூழ்நிலை உள்ளது. பொதுமக்களின் நலன் கருதி மேற்படி வடிகாலுக்கு இரும்பிலான அமைப்பு ( Grill Work ) செய்து வடிகாலினை மூடுவதற்கு உண்டான பணியினை மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ .25000 மேற்படி பணிக்கான செலவினத்தினை இந்நகராட்சி .ஆகும் -/ .பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**<u>அலுவலக குறிப்பு</u>-**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 1141 / 2018 / இ1**

**தீர்மான எண்**: 851

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**<u>பொருள் 02:</u>-**

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பாரஸ்ட் ரோட்டில் இயங்கி வருகின்ற நாடார் சரசுவதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி , நாடார் சரசுவதி நர்சரி மற்றும் பிரைமரி பள்ளிகளில் சாலை போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருப்பதால், மாணவர்கள்

பள்ளிக்கு வருவதற்கு மிகவும் சிரமமாக உள்ள நிலையில் கிழக்கு பக்கமுள்ள காம்பவுண்ட் சுவரினை யொட்டி நடைபாதையினை ( Platform ) நர்சரி பள்ளி வாசல் முதல் நேதாஜி சாலை வரை அமைத்து தர கோரிக்கை வைத்து , இப்பணியினை நமக்கு நாமே திட்டத்தின் மூலமாக செயல்படுத்துவதற்கு பணிக்கான பங்களிப்பு தொகையினை செலுத்துவதற்கு சம்மதம் தெரிவித்து வரப்பெற்ற கடிதத்தின் பேரில், மேற்படி இடத்தினை (பாரஸ்ட் சாலையினை )

ஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் நடைபாதை அமைக்க கோரியுள்ள இடத்தில் 10 எண்ணிக்கையில் மின்கம்பங்களும் , மற்றும் 3 எண்ணிக்கையில் டிரான்ஸ்பார்ம்களும் ( Transforms ) இருப்பதால் மாணவர்கள் சென்று வர இடையூறாக உள்ளது . மேற்படி 10 மின்கம்பங்களும் மற்றும் 3 டிரான்ஸ்பார்ம்களை அகற்றி மாற்று இடத்தில் அமைத்து தரும் பட்சத்தில் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு-**</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 1141 / 2018 / இ1**

**தீர்மான எண்**: 852

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

<u>**பொருள் 03:-**</u>

தேனி – அல்லிநகரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண். 4ல் உள்ள அல்லிநகரம் அரசு மேல்நிலைப்பள்ளி சாலையில் குடிநீர் இணைப்புகள் மற்றும் பாதாள சாக்கடை இணைப்பு வழங்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் ஆங்காங்கே சாலைகள் மேடு பள்ளமாக இருப்பதால் மாணவ / மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள், போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேற்படி சாலையில் மேடுபள்ளமாக உள்ள பேவர் பிளாக் கற்களை பிரித்து எடுத்து சீரமைப்பு பணியினை மேற்கொள்வதற்கு உத்தேச செலவினம் ரூ .2.30 மேற்படி பணிக்கான . இலட்சம் ஆகும் -/ செலவினத்தினை இந்நகராட்ச ி பொதுநிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு-**</u>

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 1141 / 2018 / இ1**

**தீர்மான எண்**: 853

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 04:-**

தமிழக அரசின் 2024 – 2025-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வடிங்கல் துறை கோரிக்கை எண். 34, வரிசை எண். 7-ல் புதிய சந்தைகள் அமைக்கும் திட்டத்தில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் புதிய சந்தைகள் கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான பெரியகுளம் சாலையில் உள்ள மேற்குச் சந்தையில் 1986 ஆண்டில் கட்டப்பட்டுள்ள சுமார் 145 கடைகள் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில் தற்போது மேற்படி கடைகள் பழுதடைந்த நிலையில் இருப்பதால் அக்கடைகளின் உறுதித் தன்மையினை ( Stablility ) அறிந்து புதிய கடைகள் கட்டுவதற்கான பிரேரணையினை சமர்ப்பிக்க நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலகத்தில் அறிவுறுத்தப்பட்டதின் பேரில் மேற்படி கடைகளின் உறுதித்தன்மையின் விபரங்கள் பெறும் பொருட்டு University College of Engineering, Puthukkottai கல்வி நிறுவனம் மூலம் மேற்படி பணியினை செய்து முடிக்கப்பட்டதற்கும் அதற்கான கட்டணத் தொகை ரூ.29500/- ஐ மேற்படி நிறுவனத்திற்கு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-**

மன்றம் அனுமதிக்கலாம். **ந.க.எண். 1141 / 2018 / இ1**

**தீர்மான எண்**: 854

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 05:-**

தமிழக அரசின் 2024 – 2025-ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வடிங்கல் துறை கோரிக்கை எண். 34, வரிசை எண். 7-ல் புதிய சந்தைகள் அமைக்கும் திட்டத்தில் தேனி – அல்லிநகரம் நகராட்சியில் புதிய சந்தைகள் கட்ட அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான பெரியகுளம் சாலையில் உள்ள மேற்குச் சந்தையில் 1986 ஆண்டில் கட்டப்பட்டுள்ள சுமார் 145 கடைகள் தற்போது பழுதடைந்த நிலையில் இருப்பதால் அக்கடைகளை இடித்து அப்புறப்படுத்தி விட்டு புதியதாக க்கான கடைகள் கட்டும் பணிக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யும் பணிக்கான உத்தேச செலவினத் தொகையினை நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளுவதற்கு உள்ளூர் / வெளியூர் நிறுவனங்களின் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்காணும் மூன்று நிறுவனங்களில் இருந்து விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் விபரம் | மேற்படி பணிக்கு விலைப்புள்ளிவழங்கிய நிறுவனங்கள் கோரிய பணிக்கான மொத்த தொகை | | |
|---|---|---|---|---|
| | | M/s Ayothy Consultancy | M/s SAMA Construction & Developments | M/s Duken Engineers |
| 1 | Preparation of Drawing Detailed Estimate Abstract, Elevation Drawing, Structural Design Bid Document Rate Analysis & Obtain of T.S and 3 Copies Booklet | 1.40 % | 2.00 % | 1.80 % |
| 2 | Surveying and Leveling for Proposed Market Site by Total Station / DGPS Method – Including GST 18 % | 22420 | 29500 | 27730 |
| 3 | Conducting Drilling Process SPT, Conduction Laboratory Test and Preparation of Soil Test Report, and Mobilization of Machine Loading and Unloading in varies bore location at Site in TAMC | 70800 | 76700 | 78470 |
| **Total** | | 93200 | 106200 | 106200 |

மேற்காணும் பணியினை மேற்கொள்ளுவதற்கு வரப்பெற்ற நிறுவனங்கள் கோரிய 3 விலைப்புள்ளிகளில் **M/s Ayothy Consultancy** என்ற நிறுவனம் வரிசை எண் .1ல் உள்ள இனத்திற்கு மொத்த மதிப்பீடு தொகைக்கு )Total Project Cost GST 18% Including) 1. 40% மற்றும் வரிசை எண் .2 மற்றும் 3 ல் உள்ள இனங்களுக்கான பணிகளுக்கு குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரியுள்ளதால்–**M/s Ayothy Consultancy** என்ற நிறுவனம் மூலம் மேற்படி பணியினை மேற்கொள்ளுவதற்கு வேலை உத்தரவு வழங்கிய விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

அ) T.N.U.L. B( Amentment) Act2022 where in section57 )7 (–ன்படி மேற்காணும் பணியை அவசர அவசியம் கருதி உடனடியாக மேற்கொள்ளும் பொருட்டு உள்ளூர் வெளியூர் நிறுவனங்களில் விலைப்புள்ளி பெற்று / குறைந்த பட்ச விலைப்புள்ளி கோரிய**M/s Ayothy Consultancy** என்ற நிறுவனம் மூலம் பணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கியதையும் , பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளப்படுவதையும் மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண் : 1141 / 2024 / இ1**

**தீர்மான எண்**: 855

**தீர்மானம்:** அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

**பொருள் 06:-**

தேனி – அல்லிநகரம் நகராட்சியில் தற்போது நடைபெற்று வரும் திட்டப் பணிகளின் விபரத்தினை தமிழக அரசின் மூன்றாண்டு சாதனை மலரில் விளம்பரம் செய்ய கோரி இவ்வலுவலக கடிதம் ந .எண்.க.163 /2018 1இ /, நாள் .05.07.2024 ன்படி கீழ்காணும் நாளிதழ்- நிறுவனத்தின் மூலம் பிரசுரம் செய்யப்பட ்டதற்கு தொகை வழங்க கோரி கேட்பு பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| வ. எண். | விளம்பரம் மேற்கொண்ட நாளிதழ் நிறுவனத்தின் விபரம் | தொகை |
|---|---|---|
| 1 | **மாலை முரசு நாளிதழ்**, Bill No : AD24250563, **நாள்**. 22.07.2024 | 9450 |

மேற்கண்ட பட்டியல் தொகையினை சம்மந்தப்பட்ட நாளிதழ் நிறுவனங்களுக்கு இந்நகராட்சி பொதுநிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண் : 163 / 2018 / இ1**

**தீர்மான எண்**: 856

**தீர்மானம்**: அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்றத் தலைவர்,
தேனி - அல்லிநகரம் நகராட்சி

//உண்மை நகல் //

ஆணையாளர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி.